# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண்.125 /பேரூ/2023
நாள். 20.09.2023

திரு. எஸ்.சிவக்குமார்,
பெண்ணாடம்
கடலூர் மாவட்டம் ... மனுதாரர்

செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
கடலூர் மாவட்டம் .... எதிர்மனுதாரர்

கடலூர் மாவட்டம், பெண்ணாடம், திருவள்ளுவர் தெரு எண் 9/7B என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ்.சிவக்குமார் என்பவரது 10.05.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.05.2023 அன்று பெறப்பட்டு, 125/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம், திருவள்ளுவர் தெரு எண் 9/7B என்ற முகவரியைச் சேர்ந்த திரு. எஸ்.சிவக்குமார் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சி எல்லையில் புல எண் 352/11ல் திரு. வெங்கடேசன், த/பெ. கலியபெருமாள் என்பவர் கட்டடம் கட்டி வருகிறார். எங்கள் இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டுவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கக் கோரி மனு செய்தேன்.

உள்ளாட்சி விதிகளின்படி கட்டடம் கட்டும் போது சுவற்றை ஒட்டி 2½ அடிக்கு குறைவில்லாமல் இடம் விட்டுதான் கட்ட வேண்டும். ஆனால் இந்த நடைமுறையினை திரு. வெங்கடேசன் தனது கட்டடத்திற்கு மேற்கில் இடமே விடாமல் தெற்கு, கிழக்கில் பாதி அளவு காலி இடத்துடன் தூண் எழுப்பி கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இது நாள் வரையில் அனுமதி பெறாமல் முறையற்ற வகையில் கட்டடம் கட்டியதற்கு பேரூராட்சியால் சட்டப்படியான நடவடிக்கை எடுக்காதது வேடிக்கையாக உள்ளது. ஆகவே கட்டடத்தை ஒட்டி மேற்கு புறம் 2½ அடிக்கு காலி இடம் போடப்படவில்லை. ஆனால் கட்டடத்தின் தென்புறம் மற்றும் கீழ்புறம் இடம் போட்டு கட்டப்பட்டுள்ளது. சட்ட விதிமீறல்கள் தொடர்பாக விசாரணை மேற்கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 19.05.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.

**3) பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் தனது 09.08.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சியை சார்ந்த திரு. வெங்கடேசன் என்பவர் வார்டு எண் 12-ல் மேற்கு நெடுஞ்சாலையில் உள்ள சர்வே எண் 352/5A1, புதிய சர்வே எண் 352/11-ல் வணிகக் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி கோரியிருந்தார். மேற்படி விண்ணப்பத்தின் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் நிலையில் திரு.எஸ்.சிவக்குமார் என்பவர் மேற்படி வணிகக் கட்டடம் கட்டுவதற்கு கட்டட அனுமதி கோரப்பட்டுள்ள இடத்தில் தனக்கு சொந்தமான 2 அடி சந்து உள்ளதாக தெரிவித்து மேற்படி இடத்திற்கு கட்டட அனுமதியானது விசாரணை செய்த பிறகே வழங்க வேண்டும் என தனது ஆட்சேபனை மனுவில் தெரிவித்திருந்தார்.

பின்னர் இப்புகாரினை குறித்து திரு. வெங்கடேசன் என்பவர் தனக்கு சொந்தமான இடத்தில் கட்டடவேலை ஆரம்பித்து உள்ளதாகவும், தனது இடத்தில் ஆக்கிரமிப்பு ஏதும் செய்யவில்லை என தெரிவித்திருந்தார். இதுதொடர்பாக கடந்த 02.03.2023 அன்று நேரடி விசாரணை மேற்கொண்டதில் திரு. வெங்கடேசன் என்பவர் மேற்படி இடத்தினை சர்வேயர் வைத்து அளக்கும் பட்சத்தில் ஆட்சேபனை தெரிவித்துள்ள இடம் மனுதாரருக்கு சேருமாயின் அந்த இடத்தை விட்டுக் கொடுப்பதாக தெரிவித்திருந்தார். மேலும் திரு.சிவக்குமார் என்பவர் மேற்படி இடத்தினை உட்பிரிவு செய்ய திட்டக்குடி வருவாய் வட்டாட்சியருக்கு கடந்த 12.01.2023 அன்று கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது எனவும் மேற்படி இடத்தினை சர்வேயர் மூலம் அளந்த பிறகு அனுமதி வழங்கவேண்டும் என தெரிவித்திருந்தார். எனவே அதன் அடிப்படையில் மேற்படி இடத்தினை சர்வேயர் மூலம் அளந்து அத்து காண்பிக்கப்பட்டப்பிறகு அரசு விதிகளுக்குட்பட்டு கட்டடம் கட்டுவதற்கு அனுமதி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அதுவரையில் மேற்படி இடத்தில் எவ்வித கட்டட பணிகளும் மேற்கொள்ளக்கூடாது என 02.03.2023 தேதியிட்ட பேரூராட்சி அலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி இடத்திற்கு திரு. வெங்கடேசன் என்பவர் திட்டக்குடி வருவாய் வட்டாட்சியர் அவர்களுக்கு சர்வே எண் 352/5A1-ல் அளவீடு செய்ய மனு செய்ததின் அடிப்படையில் நில அளவையர் 18.04.2023 அன்று திரு.வெங்கடேசன் மற்றும் மனுதாரர் திரு.எஸ். சிவக்குமார் ஆகிய இருவரின் முன்னிலையிலும் புலப்பட சுவடியில் உள்ளவாறு திட்டக்குடி வட்டம், பெண்ணாடம் குறுவட்ட பொறுப்பு சார்ஆய்வாளர் (நில அளவை), கிராம நிர்வாக அலுவலர் மற்றும் கிராம முக்கியஸ்தர்கள் முன்னிலையில் நான்கு பக்க எல்லை அளவுகளை அளந்து அத்து காண்பிக்கப்பட்டு சான்று பெறப்பட்டுள்ளது. மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் எதுவும் இல்லையென அளவீடு செய்யப்பட்ட சான்று வழங்கப்பட்டுள்ளது. எனவே சர்வே எண் 352/5A1-ல் உள்ள மேற்படி இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என சார் வட்டாட்சியர் சான்று அளித்ததின் அடிப்படையில் மேற்படி இடத்தில் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

(4) மனுதாரர் மற்றும் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரும் 14.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 03.08.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

**5) 14.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-**

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண்.352/11ல் திரு. வெங்கடேசன் என்பவர் என்னுடைய இடத்தை ஆக்கிரமிப்பு செய்து, பேரூராட்சி விதிகளின்படி மேற்கு இடம் விடாமல் கட்டடம் கட்டியுள்ளார். மேற்கண்ட கட்டடம் கட்டியுள்ள உரிமையாளர், தான் வாங்கிய 5 செண்ட் இடத்திற்கு பதிலாக 5¼ செண்ட் இடத்தில் எங்களுக்கு சொந்தமான கால் செண்ட் இடத்தையும் சேர்த்து வீடு கட்டியுள்ளார். இவ்வாறு பேரூராட்சி அனுமதியில்லாமல் முறையற்ற வகையில் விதிகள் மீறி கட்டியுள்ள கட்டடம் குறித்தும் எங்களது இடத்தை ஆக்கிரமித்துள்ளது குறித்தும் கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர், பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் ஆகியோரிடம் புகார் அளித்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

எனவே மேற்கண்ட கட்டடத்தை இடம் விடாமல் கட்டியுள்ள கட்டட உரிமையாளர் மீது தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவன செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன். மேலும் இந்நேர்வு தொடர்பான புகைப்படங்களின் நகல்களை இம்முறை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

**6) பெண்ணாடம் பேரூராட்சியின் செயல் அலுவலர் 14.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:-**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள இடத்தை என்னால் நேரடியாக ஆய்வு செய்யப்பட்டது. மேற்கண்ட கட்டடம் பேரூராட்சியில் அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. அக்கட்டடம் அனுமதிக்கு மாறாக கட்டப்படவில்லை. மனுதாரரின் புகாரையொட்டி திட்டக்குடி வருவாய் வட்டாட்சியருக்கு சர்வே எண் 352/5A1ல் அலுவலக நில அளவையர் மற்றும் மனுதாரர்

முன்னிலையில் மேற்கண்ட கட்டடத்தின் நான்கு பக்க எல்லை அளவுகள் அளந்து காண்பிக்கப்பட்டு மேற்கண்ட இடத்தில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என சான்று அளித்துள்ளனர். எனினும் மீண்டும் நானே பேரூராட்சி பொறியாளருடன் நேரில் சென்று கள ஆய்வு செய்து கட்டட உரிமையாளர் பெற்றுள்ள கட்டட அனுமதிக்கு மாறாக ஏதேனும் கூடுதலாக கட்டப்பட்டுள்ளதா என ஆராய்ந்து, அவ்வாறு கட்டப்பட்டிருப்பின் அக்கட்டடம் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மேற்கண்ட கட்டடத்தை ஆய்ந்து அதன் அறிக்கை மற்றும் ஸ்கெட்ச் ஆகியவற்றை இன்னும் 1 வார காலத்தில் இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன் என இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் 9.8.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், பெண்ணாடம் பேரூராட்சி செயல்அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

கடலூர் மாவட்டம், பெண்ணாடத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. எஸ்.சிவக்குமார் என்பவர் தனது 10.05.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண் 352/11ல் திரு. வெங்கடேசன் என்பவர் தனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டி வருவதாக புகார் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டம், பெண்ணாடம் பேரூராட்சிக்குட்பட்ட புல எண். 352/11ல் திரு. வெங்கடேசன் என்பவர் மனுதாரர் திரு. எஸ். சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான ¼ செண்ட் நிலத்தையும் ஆக்கிரமிப்பு செய்து கட்டடம் கட்டி வருவதாக மனுதாரரிடமிருந்து பேரூராட்சிக்கு புகார் வரபெற்றதும், மனுதாரரின் முன்னிலையில் பெண்ணாடம் சார் ஆய்வாளர் (நிலஅளவை) கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் மேற்படி இடத்தினை அளவீடு செய்து, எவ்வித ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என அறிக்கை அளிக்கப்பட்டுள்ளதை திட்டக்குடி வருவாய் வட்டாட்சியரின் சான்றின் மூலம் அறிய வருகிறது. இருப்பினும் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலர் இம்முறைமன்ற நடுவத்தில் 14.08.2023 அன்று நடைபெற்ற விசாரணையின் போது, மனுதாரர் புகாராக தெரிவிக்கும் இடத்தினை மீண்டும் தானே பேரூராட்சி பொறியாளருடன் நேரில் சென்று களஆய்வு செய்து அறிக்கையை 1 வாரக்காலத்திற்குள் இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பிப்பதாக தெரிவித்துள்ள நிலையில் இந்நாள் வரை பெண்ணாடம் செயல் அலுவலரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்படவில்லை. உரிய காலத்தில் அறிக்கையை அனுப்பாத பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரின் அலட்சியப்போக்கினை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க பேரூராட்சிகளின் இயக்குநர் கோரப்படுகிறார். இதுபோன்ற ஒழுங்கீனங்கள் உதாசீனங்கள் ஏற்புடையதல்ல. இவைகளை இம்முறைமன்றம் கடுமையாகக் கண்டிக்கிறது.

எனவே, பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளபடி மனுதாரர் புகாராக தெரிவிக்கும் கட்டடத்தை கள ஆய்வு செய்து, ஆய்வில் மனுதாரர் திரு.எஸ்.சிவக்குமார் என்பவருக்கு சொந்தமான இடத்தில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டடம் ஏதும் கட்டியிருப்பின் 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி அமைப்புக்கள் சட்டம், பிரிவு 133ன்கீழ் ஆக்கிரமிப்பினை அகற்றுவதற்கான உரிய சட்டபூர்வ நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறும் அதன் அறிக்கையை 15 நாட்களுக்குள் இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பி வைக்குமாறும் பெண்ணாடம் பேரூராட்சி செயல் அலுவலரை அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் 20–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. எஸ்.சிவக்குமார்
9/7B, திருவள்ளுவர் தெரு,
பெண்ணாடம்,
கடலூர் மாவட்டம்–606 105.

2) செயல் அலுவலர்,
பெண்ணாடம் பேரூராட்சி,
பெண்ணாடம்,
கடலூர் மாவட்டம்

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரியிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை –600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்